©
தமிழ்நாடு அரசு
2017

பதிவெண்: எம்.

# திருவண்ணாமலை மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

திருவண்ணாமலை, ஏப்ரல் 24, 2017

[ எண் 8

சித்திரை 11, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு—2048

## உள்ளாட்சித் துறை அறிவிக்கை

**ஆரணி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டம்-சேவை வரி கட்டணம் குறித்து இயற்றப்பட்ட துணை விதி குறித்த அறிவிப்பு.**

**ஆரணி நகராட்சி**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

நகர்மன்ற தீர்மான எண். 001 , நாள் 13.04.2017 ன் படி திடக்கழிவு மேலாண்மை திட்ட துணை விதிகள் மற்றும் நிர்வாக கட்டணங்கள் வெளியிடப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016

(ந.க.எண். 504/2017/எச்1, நாள் 13.04.2017)

1. சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 ( சட்ட எண். 29/1986) ல் பிரிவு 3,6 மற்றும் 25-களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குடபட்ட பகுதியில் நகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம் பிரித்தல், எடுத்துச் செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 – ல் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த நகராட்சி நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து கழிவுகளை கண்ட இடங்களில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம் பிரித்து நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**ஆரணி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306 -- ன் கீழ் இயற்றப்பட்டது**

ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி தனிநபர் குடியிருப்பு, வணிக வளாகங்கள், உணவு விடுதிகள், சிற்றுண்டி சாலை, மருத்துவமனைகள், மொத்த வணிகர்கள், சில்லரை வணிகர்கள் மற்றும் அனைத்து வணிகர்கள் உட்பட அனைவரும் ஆரணி நகராட்சியை துாய்மையான நகராட்சி பகுதியாக்க திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்படி திடக்கழிவுகளை மேலாண்மமை செய்தல் முறைப்படுத்தப்பட்டு உள்ளது. இதன்படி நகராட்சி திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016-ன் அட்டவணை 11 வரிசை எண். 1(3)-ன்படி கழிவை உருவாக்குபவர் அதனை குப்பையாக வெளியே போடுவதை தவிர்க்கும் பொறுப்புடையவராவர். அவர் அதிகார அமைப்பினால் அறிவிக்கப்பட்ட சேகரித்தல் மற்றும் பிரித்தல் முறைக்கு இணங்கி கழிவை ஒப்படைப்பு செய்ய உறுதி செய்ய வேண்டியவராவர்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் VIII பிரிவு 153,156,157,158,160 மற்றும் 161 –ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய ஏற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொதுசுகாதாரம் பேணி சுற்றுச்சூழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து பணம் வசூலித்து செயல்படுத்தவும் நச்சுத்தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய கழிவுகளையோ, மலக்கழிவுகளையோ, மருத்துவக்கழிவுகளையோ மாற்றம் செய்தல், சாலைகளில் போடுதல் மற்றும் வடிகால்வாய்களில் கொட்டுதல் ஆகியவை தடை செய்யப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், வடிகால்வாய் தங்குதடையின்றி செயல்படவும், நிலத்தடி நீா் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொதுசுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்படி நகர்மன்றம் ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மைத்திட்ட செயல்பாட்டிற்கு தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மைக் கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழங்கப்படுகிறது.

ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகள், தெருக்கள், சந்துக்கள், கடை வீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், உணவகங்கள், அலுவலகங்கள், வணிகவளாகங்கள் மற்றும் இதர பிற இடங்களில் வசிக்கும் மக்கள் திடக்கழிவுகளை தெருக்களிலோ, சாலை ஓரங்களிலோ, சந்துக்களிலோ, கழிவுநீர்க்கால்வாய்களிலோ, பொது இடங்களிலோ மற்றும் நீர்நிலைகளிலோ போடக்கூடாது என்று தடைவிதிக்கப்படுகிறது.

மக்கள் வசிக்கும் மற்றும் கூடும் இடங்களில் உருவாகும் குப்பைகளை மக்கும் தன்மை உள்ளவற்றினை தனியாகவும், மக்காத தன்மை உள்ளவற்றினை தனியாகவும் சேகரம் செய்யப்பட வேண்டும். மக்கும் தன்மையுள்ள குப்பைகளை பச்சைநிறக் கூடையிலும், மக்காத